**கவனிக்க** .- *2014.12.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1896 - 2015 ජනවාරි මස 02 වැනි සිකුරාදා - 2015.01.02

*1896 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 4 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, சனவரி மாதம் 26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, திசெம்பர் 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே வடக்கு பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 |

1-91

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் உள்ள மாவட்ட, பிரதேச செயலகங்களில் சேவையாற்றுவதற்காக நியமனம் செய்யப்படுவதற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

மேற்கூறப்பட்ட பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் தங்கள் தகைமைத் திறமைகளை நிரூபிக்கும் பரீட்சார்த்திகள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்படுவதற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III இற்கு அல்லது பயிற்சித் தரத்திற்கு பதவிகளில் பயிலுநர் பயிற்சி நியமனத்திற்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

3. **வயதெல்லை.**- பரீட்சார்த்திகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும்

இருத்தல் வேண்டும். இருப்பினும் ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

4. (அ) **தரம் III**.- *கல்வித் தகைமைகள் :-*

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும் ;

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல் உள்ளடங்கலாக கணிதத் துறையில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

*தொழில்சார் தகைமைகள்.-* பரீட்சார்த்திகள் மேற்படி 4(அ) இல் குறிப்பிட்ட கல்வித் தகைமைகளுடன் பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப வியல் டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியற் பரீட்சையில் முதலாம் பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(vi) தொழில்துறைக்குரிய தேசிய தொழிற்திறன் (NVQ) 6 ஆம் மட்டத்திற்கான தகைமையைப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே கூறப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் ஏனைய நிறுவனங்களின் அபிப்பிராயத்தின் பேரில் சகல வழிகளிலும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கும் சமமான தென மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(ஆ) *பயிற்சித் தரம்.-* கல்வித் தகைமைகள் :

(i) மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் ;

(ii) தூய கணிதம்/பிரயோக கணிதம் மற்றும் பௌதீகவியல் உள்ளடங்கலாக கணிதத் துறையில் மூன்று பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

*தொழில்சார் தகைமைகள்.-* மேலே காட்டப்பட்ட அடிப்படை கல்வித் தகைமைகளுடன் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்தில் தொழில் துறையுடன் தொடர்பான தேசிய தொழிநுட்ப சான்றிதழ் (மூன்று வருட பகுதி நேர பயிற்சி நெறி) பெற்றிருத்தல்.

*குறிப்பு :*

* திறந்த போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் சேவைக்குரிய விடய சிபாரிசுகளின் அடிப்படையில் பெறுகின்ற ஒரு வருட உள்ளக மற்றும் செயன்முறைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து உரிய பரீட்சையில் சித்தியடைந்ததாக உரிய நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற சான்றிதழை சமர்ப்பித்ததன் பின் III ஆம் தரத்திற்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பப் படிநிலையில் வைக்கப்படுவர்.
* பயிற்சி முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு 6 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடிக்கப்பட்ட கால எல்லை முடிவில் மீண்டும் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் சித்தியெய்தாத பயிலுநர்களின் சேவை இடைநிறுத்தப்படும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- (அ) தரம் *III* - பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இன்கீழ் உள்ள எம். என். 3-2006ஏ (ரூ. 15,005-180 x 4 - 240 x 6 - 320 x 11 - 360 x 20-27,885) III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 3 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டியதுடன் நியமனம் பெற்று 5 வருடங்களுக்குள் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இன் பிரகாரம் அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) பயிற்சித் தரம் - மாதாந்த கொடுப்பனவு ரூ. 12,920.

**6. சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மாகும் ;

(ii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்படுவர் ;

(iii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தீவின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும் ;

(iv) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மூன்று வருடகாலத் தகுதிகூர் காலப்பகுதியொன்றிற்கு உட்படுத்தப்படுவர். ஏற்கனவே சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் ஒரு வருட பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்படுத்தப்படுவர் ;

(v) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தாபன விதிக் கோவைகள், நிதி ஒழுங்கு விதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள், அரசாங்கத்தினால் காலத் திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைகள், திணைக்களத் தினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்படுத்தப்படுவர்.

7. (I) **ஆட்சேர்ப்பு முறை**.- இந்தப் பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தொழில் நுட்பவியற் சேவைப் பிரிவின் மேற்பார்வையில் 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் கொழும்பில் மட்டும் நடாத்தப் படும்.

(II) *பரீட்சைத் திட்டம்*.- (i) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் மாத்திரமே நடாத்தப்படும். பரீட்சார்த்தியால் விண்ணப்பிக்கப்பட்ட மொழிமூலமானது மாற்றப்படுவதற்கு அனுமதிக் கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்திகள் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்திகள் பரீட்சையை நடத்துவதும், பெறுபேறுகளை வெளியிடுவதுமான நோக்கத்திற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவதுடன் இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கும் உட்படுதல் வேண்டும்.

(iv) *பரீட்சைக்குரிய பாடங்கள்*.- பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

(1) நுண்ணறிவுப் பரீட்சை ;
(2) விடயம்சார் தொழில்நுட்பப் பரீட்சை.

**குறிப்பு**.- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரமாகிய III ஆம் தரத்திற்கு தகைமை பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கைக்குப் போதியதாக இல்லாவிடின், மேற்படி 4(ii) இன் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எஞ்சிய வெற்றிடங்களுக்காக பயிற்சித் தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

8. **பாடவிதானம்** :

(1) நுண்ணறிவுப் பரீட்சை (*கால அளவு : 1 மணித்தியாலம்*) - புள்ளிகள் 100

இப்பத்திரமானது பரீட்சார்த்தியின் பொது விவேகம், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்யும் திறமை என்பவற்றை பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

(2) விடயம்சார் தொழில்நுட்பப் பரீட்சை (*கால அளவு : 3 மணித்தியாலங்கள்* - புள்ளிகள் 100

இப்பத்திரமானது திட்டங்களை வடிவமைத்தல், விளங்கிக் கொள்ளுதல், நீர் விநியோகம், வடிகாலமைப்பு முறைமைகள், கழிவகற்றல் என்பவற்றிற்காக கட்டிட நிர்மாணத்தின் கோட்பாடுகள் மீது பரீட்சார்த்தியின் அறிவினை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

ஆட்சேர்ப்புக்கான முன்னுரிமைப் பட்டியலானது ஒவ்வொரு பத்திரத்துக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் மீது தயாரிக்கப்படும்.

* **குறிப்பு**.- பரீட்சார்த்திகள் இந்த வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் பொருட்டு பரீட்சை மண்டபத்திற்கு கேத்திரகணித வரைவுச் சாதனங்களையும் ஏனைய உபகரணங்களையும் கொண்டுவரும்படி வேண்டப்படுகின்றனர்.

9. **பிழையான தகவல்களை அளிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தினை நிரப்பும்போது சரியான தகவல்களை அளிப்பதில் கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து அவரது பரீட்சார்த்த உரிமையானது பரீட்சையின் விதி, ஒழுங்குகளின் பிரகாரம் இந்தப் பரீட்சைக் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் முன்னரோ அல்லது பின்னரோ எந்த நிலையிலும் இரத்துச்செய்யப்படலாம். தவறான தகவல்களை அளிக்கும் ஒருவராகக் காணப்படும் விண்ணப்பதாரரொருவர் எந்த நிலையிலும் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உரியவராகக் காணப்படுவர். பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டையொன்றினை வழங்குதலானது பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை அவர் பெற்றுள்ளார் எனக் கருதுதல் ஆகாது.

10. **பரீட்சைக் கட்டணம்**.- இந்தப் பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இக்கட்டணமானது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் சுதந்திர சதுக்க கிளையின் 02323278 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கும் பொருட்டு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்தப்படுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது விண்ணப்பப்படிவத்தில் இயைபுடைய கூட்டினுள் பத்திரமாக ஒட்டப்படுதல் வேண்டும். (எதிர்காலச் சான்றாதாரத்துக்காக பரீட்சார்த்திகள் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினைத் தம்வசம் வைத்திருப்பது உசிதமானது). எந்தவொரு சூழ்நிலையிலும் பரீட்சைக் கட்டணமானது மீளளிக்கப்பட மாட்டாது.

11. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பங்கள் ஏ4 (21 x 29 செ. மீ.) சாதாரண தாள்கள் (normal half sheets) அளவிலான கடதாசிகளை உபயோகித்து–

(i) இல. 01 - 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ii) இல. 04 முதல் ஏனைய பந்திகள் அடுத்த பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(iii) அரைகுறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட மாதிரிப்படிவத்துடன் இணங்காதவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதியொன்றினை எடுத்து வைத்திருப்பது புத்திசாதுரியமானது. பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரியுடன் இணங்குமாறு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். சிங்களம், தமிழ் மொழி மூலங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் ஆங்கில மொழியிலும் பரீட்சையின் பெயரானது குறிப்பிடப்படுதல் அவசியமானது.

(ஆ) பூர்த்தியாக்கப்பட்ட பரீட்சைக்கான விண்ணப்பப்படிவமானது 2015.02.02 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கீழே குறிப்பிட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்,
இல. 28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 7

விண்ணப்பப்படிவத்தினை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ''இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2014'' என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப் பத்தின் பிரிவு 12 இன்கீழ் திணைக்களத் தலைவரினால் உறுதிப் படுத்தப்பட்ட விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

(ஈ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப் பட்டவுடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் சகல விண்ணப்பதாரிகளுக்கும் குறுந்தகவல் (எஸ்எம்எஸ்) ஒன்று அனுப்பப் படும். அத்தகைய தகவல் அனுப்பப்பட்டு ஒரு வாரம் கழிந்த பின்னரும் அனுமதி அட்டையினைப் பெற்றுக்கொள்ளாவிடின், 0115980236 என்னும் இலக்கத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைப் பிரிவிற்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

(உ) பரீட்சார்த்திகள் முன்கூட்டியே உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் பரீட்சை நடைபெறும் திகதியில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சை எழுதுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஊ) அனுமதி அட்டை ஒன்று பரீட்சார்த்தி ஒருவருக்கு வழங்கப்படுதலானது பரீட்சார்த்தியானவர் பரீட்சை எழுதுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதுதல் ஆகாது.

12. பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காக பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை ஒப்புவிக்கும்படி வேண்டப்படுகின்றனர் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

13. இந்த ஒழுங்குவிதிகளின் பொருட்டு ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விபரங்கள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் மூலம் மேற்கொள்ளப்படும். பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சை தொடர்பான பொதுவிதி, ஒழுங்குவிதிகள் மூலம் கட்டுப்படுத்தப்படுவர்.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, திசெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மொழி மூலம் :
சிங்களம் -2
தமிழ் -3 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

விண்ணப்பிக்கும் தரம் :
III ஆம் தரம்-1
பயிற்சி தரம்- 2 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) உதாரணம் : PERERA A.B.C :----.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.5 தொலைபேசி இல. :
கையடக்கத் தொலைபேசி :----.
வதிவிடத் தொலைபேசி :----.
(கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினைக் குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.)

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.4 தபால் மாவட்டம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் :
பெண்-1
ஆண்-0 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.3 2015.02.02 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் :
(1) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் :
(1) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :----.
(2) சுட்டிலக்கம் :----.
(3) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்சார் தகைமைகள் :

| நிறுவனம் | கற்ற கற்கை நெறிகள் | கால அளவு | சித்தி | சான்றிதழ் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. ஏனைய தகைமைகள் : ............................................................................
............................................................................
............................................................................
............................................................................
............................................................................
............................................................................

7. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பின் -
7.1 திணைக்கள/நிறுவன முகவரி :----.
7.2 தற்போதைய பதவி :----.
7.3 சேவைக்காலம் :----.
7.4 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மானதா அல்லது தற்காலிகமானதா ? :----.

8. நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் குற்றத் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளீர்களா ? (பொருத்தமான கூட்டினுள் ✓ அடையாளமிடுக.) விடை ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

............................................................................
............................................................................
............................................................................

9. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :
9.1 கொடுப்பனவு மேற்கொண்ட கிளை :----.
9.2 திகதி :----.
9.3 தொகை :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும் |
|---|

10. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

(1) இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மை யானவை எனவும் சரியானவையெனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் சில பகுதிகளைப் பூர்த்திசெய்யாது மற்றும் அல்லது தவறாகப் பூர்த்திசெய்து ஏற்படுகின்ற நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) இதில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் தவறாகக் காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் தவறு நியமனத்திற்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப் படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(3) இப்பரீட்சையை நடாத்தும் பொருட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் விதிக்கப்படும் சகல நிபந்தனை களுடனும் இணங்கியொழுகுவதற்கு நான் இத்தால் சம்மதிக்கிறேன்.

(4) மேலே குறிப்பிட்ட எத்தகவல்களையும் பின்னர் மாற்றஞ்செய்ய மாட்டேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

11. **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ........................................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

12. **விண்ணப்பதாரி அரச உத்தியோகத்தர் ஒருவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./ திருமதி/ செல்வி ........................................ இன் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில், நிரந்தர/ தற்காலிக/ அமைய உத்தியோகத்தர் ஒருவராக பணிபுரிவதாகவும் இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப் பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிப்பதற்கு இயலும்/ இயலாது என்பதை அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

## அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012 (I) (2014)

2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 5 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2015, ஏப்பிறல் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் அரசாங்க அலுவலகங்களில் பாவிக்கப்படும் (1) அலுவலக முறைமையும் நடைமுறைகளும், (2) கணக்கீட்டு முறைமைகள் என பெயர் குறிப்பிடப்படும் இப்பரீட்சையின் இரண்டு பாடங்களையுமோ அல்லது அவற்றில் ஒன்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறல் வேண்டும்.

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் தரம் II இற்கு உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.

3. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/நகரங்கள் பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

5. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையினைச் சித்தியெய்த வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் மற்றைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் அவ்வவ் நிறுவனங்களினால் வெளியிடப்படும்.

"ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ்விலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும்."

6. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2015, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால்

விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

8. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவினதான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்படுமாயினும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயார்செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பி வைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தில் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 200 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப் பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது.

9. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன், அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொழும்புக்குப் புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கும் அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்புதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதலாகாது.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

11. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் உரிய சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப் பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் இணைப்பு 5 ஐப் பார்க்கவும்.)

13. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

14. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

15. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | பாட இலக்கம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைகளும் நடைமுறையும் | 01 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| | மொத்தம் : | | | 200 |

15.1 அலுவலக முறைகளும் நடைமுறையும்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

15.2 *அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்.-* அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத் தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

16. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். இப்பரீட்சை அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின் சிங்கள உரையே மேலோங்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2014, திசெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2012 (I) 2014**

Efficiency Bar Examination for Officers in Grade II of Public Management Assistants' Service – 2012 (I) 2014

(இப்பரீட்சை அறிவிப்பின்படி இணைந்த சேவைகளில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்று வதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். (பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.) | |

உங்களுக்குரிய சேவை (இதைப் பூரணப்படுத்துவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் குறிப்பை நன்கு வாசிக்கவும்.) [ ]

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
உதா : SILVA, M. A.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ————.
1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :————.

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-
2.1 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
2.2 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
2.3 அலுவலகம்/திணைக்களம்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :————.

3. பால் :-
பெண் – 1, ஆண் – 0 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீங்கள் இம்முறை தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :
6.1 பதவி :————.
6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :————.
6.3 அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி :————.

7. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? : ————.

7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :————.

7.3 பற்றுச்சீட்டை ஒட்டுவதற்காக :————.

> பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.
> (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு .................................... முறையாகத் தோற்றுகின்றேன் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும்/பரீட்சைக் கட்டணம் .................................... தபால்/ உப தபால் அலுவலகத்திற்கு .................................... ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட .................................... ஆம் இலக்க பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

### கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்

திரு./திருமதி/செல்வி .................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், அவர் முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்க முடியும் என்றும்/ உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப் பட்டதென்றும்,

(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,

(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/ தோற்றவில்லை* என்றும்,

(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,

(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

1-172

---

## அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2013(2014)

1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் பந்தி 8 இன்கீழ் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின்படி மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2015, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

2. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. சரியாகவும் தெளிவாகவும் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2015, பெப்புருவரி மாதம் 2 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முன் வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. (i) விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 1 இலிருந்து 2.10 வரையிலான பந்திகளை 1 ஆவது பக்கத்திலும் ஏனையவை 2 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் விண்ணப்பப்

படிவத்தை ''ஏ4'' அளவிலான தாளொன்றின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சிலிட்டு தயார் செய்துகொள்ள முடியுமாயினும் அதை விண்ணப்பதாரியின் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமைபெறாத தகவல்கள் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ii) அரச கரும மொழிக்கொள்கையின் நோக்கங்களுக்காக சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றினை அதே மொழியில் நிரப்பவும் வேண்டும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும்.

**4. பாடவிதானமும், பரீட்சைத் திட்டமும் :**

முதலாம் பாடம்- வினாத்தாள் இல. 1 :

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்

(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் :

(அ) ஓர் அரச கரும ஆவணம் அல்லது அறிக்கை, அத்துடன்

(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை

மொழிபெயர்த்தல்.- விண்ணப்பதாரர்கள் தனது மொழி பெயர்ப்பு மொழிமூலத்திற்கேற்றபடி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல் :

(i) சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு

(ii) சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு

(iii) தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு

3 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் - 100 புள்ளிகள்

இரண்டாம் பாடம்- வினாத்தாள் இல. 2

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி, அத்துடன்

(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள்

(அ) ஓர் அரச கரும ஆவணம் அல்லது அறிக்கை

(ஆ) ஒரு புதினப் பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை

விண்ணப்பதாரர்கள் தனது மொழிமூலத்திற்கேற்றப்படி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல் :

(i) தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு

(ii) ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு

(iii) ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு

3 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்று - 100 புள்ளிகள்

* இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகளின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் அறவிடப்படும் :

(அ) முதன் முறைக்காக கட்டணமெதுவும் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அடுத்துள்ள சந்தர்ப்பத்தில் தோற்றுவதற்கான கட்டணங்கள் முழுப்பரீட்சை எடுப்பதற்கு 400 ரூபாவாகவும், தனித்து ஒரு பாடம் எடுப்பின் 200 ரூபாவாகவும் இருக்கும்.

(இ) பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்து தீவில் அமைந்திருக்கும் எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதியைத் தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும்.

(ஈ) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப் படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது :

**7. பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(i) விண்ணப்பங்களை அனுப்பிவைத்த சகல பரீட்சார்த்தி களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் இன்றி அவர்களை பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கோ அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ்வறிவிப்பு வெளியாகி 2/3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தலில் குறிப்பிட் டுள்ளதன்படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்பு வதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியாயின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித் தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்த லுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும்போது விண்ணப்பதாரியின் வசம் உள்ள விண்ணப்பப்படிவப் பிரதி அத்துடன் உரிய பணம் செலுத்த வேண்டுமாயின் பற்றுச்சீட்டின் பிரதியொன்றும், விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும் ;

(ii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி அட்டையுடன் பிரத்தியேகமாக நேரசூசியொன்றும் வழங்கப்படும் ;

(iii) இப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் படும் எத்தண்டனைக்கும் உள்ளாதல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரிகளுக்கு விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகள், ஒழுங்குவிதிகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதானது ஒரு விண்ணப்பதாரர் அப்பரீட்சையில் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

8. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியதாக திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

அனுமதி அட்டையுடன் மேற்போந்த ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

10. பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- பரீட்சை முடிவுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

11. இப்பரீட்சை பற்றிய அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாயிருக்கும்.

12. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, திசெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2013 (2014)

Efficiency Bar Examination for Officers in Class I of the Government Translators' Service - 2013 (2014)

(**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பப்படிவம் சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.)

1. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இற்கு அமைய தாங்கள் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டிய முறை :

வினாத்தாள் இலக்கம் 01 :
சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 1
சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு - 2
தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 02 :
தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு - 4
ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு - 5
ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 6
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 1 அல்லது வினாத்தாள் இலக்கம் 2 அல்லது இரு வினாத்தாள்களுக்கும் தோற்ற முடியும்.

2. தனிப்பட்ட விடயங்கள் :

2.1 முதலெழுத்துக்களை இறுதியாகக் குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

2.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 அலுவலக/திணைக்கள/அமைச்சின் பெயர் :----.

2.5 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

2.6 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

2.7 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐

2.8 தேசிய அடையள அட்டை இல. :

☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 தற்போது வகிக்கும் பதவி :----.
2.10 நியமனக் கடிதத்தின் இல. :----.

3. 3.1 நீர் இப்பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றுகின்றீரா ? : ----.
3.2 இல்லாவிட்டால், பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
திகதி :----.
வழங்கப்பட்ட மாவட்ட/பிரதேச செயலகம் :----.

| |
|---|
| பாடமொன்றிற்காக 200 ரூபா மற்றும் சகல பரீட்சைக்குமாக 400 ரூபா கொடுப்பனவிற்காக ஏதாவது மாவட்ட/பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டானது இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) |

4. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

மேற்தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவரென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு நான் அமைந்தொழுகவும் உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகிறேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்திலுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர் என்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,
(iv) இவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடையவர் என்றும்,
(v) இவரால் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும், (தேவையற்றது எனின் கீறிவிடவும்)

இத்தால் நான் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

1-173

---

திருத்தம்

**இலங்கை புகையிரத திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர புகையிரத என்ஜின் சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

மேற்குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வேண்டி 1891 ஆம் இலக்க 2014.11.28 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் இலக்கம் 4(அ) கல்வித் தராதரத்தின்கீழ் (ii) ஆம் பந்தியைக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்கிறேன் :-

"க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் கணிதம், பௌதிகவியல், விஞ்ஞானம் மற்றும் இன்னுமோர் விஞ்ஞான விடயத்துடன் சகல விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் தூய கணிதம், பௌதிகவியல் விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு விஞ்ஞான விடயம் உட்பட மூன்று (3) விடயங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.)"

அதன்படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2015.01.30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வீ. அமரதுங்க,
புகையிரத பொது முகாமையாளர்.

1-153

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும்** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2015**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 02.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.12.2014 |
| | | வெள்ளி | 09.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.12.2014 |
| | | வெள்ளி | 16.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.01.2015 |
| | | வெள்ளி | 23.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.01.2015 |
| | | வெள்ளி | 30.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.01.2015 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 06.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.01.2015 |
| | | வெள்ளி | 13.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.01.2015 |
| | | வெள்ளி | 20.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.02.2015 |
| | | வெள்ளி | 27.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.02.2015 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 06.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.02.2015 |
| | | வெள்ளி | 13.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.02.2015 |
| | | வெள்ளி | 20.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.03.2015 |
| | | வெள்ளி | 27.03.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.03.2015 |

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.